RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 363 | ஜனவரி.2 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



■ மதுரை மாநகரத்தில் புதிதாக வடக்கு காவல் துணை ஆணையராக S.மதிவாணன். IPS இன்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். கோவை மாவட்டத்தை சேர்ந்த இவர் 2022 ஐபிஎஸ் அதிகாரி ஆவார். இதற்கு முன்பு காவல் கூடுதல் கண்காணிப்பாளராக அருப்புக்கோட்டை மற்றும் சிலைமான் சரகங்களில் பணிபுரிந்துள்ளார்.

# ஆன்லைன் விளையாட்டு நிறுவனத்தின் ரூ.192 கோடி டெபாசிட் முடக்கம்: அமலாக்கத்துறை அதிரடி

புதுடில்லி: ஜன.2-

ஆன்லைன் விளையாட்டு நிறுவனமான வின்சோ நிறுவனத்தின் ரூ.192 கோடி மதிப்பு டெபாசிட் முடக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் இந்தநடவடிக்கையை அமலாக்கத்துறை மேற்கொண்டுள்ளது.



இந்தியாவில் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இதனை தொடர்ந்து வின்சோ நிறுவனத்துக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அதில் அந்த நிறுவனம் கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பயனர்களை மென்பொருளுடன் விளையாட வைத்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும், ஆன்லைன் விளையாட்டை மத்திய அரசு தடை செய்த பிறகு, பயனர்களுக்கு திருப்பித் தர வேண்டிய 43 கோடி ரூபாயை திருப்பித் தராமல் வங்கியில் வைத்து இருந்தது. இதனையடுத்து மோசடியில் கிடைத்ததாக கருதப்பட்ட 505 கோடி ரூபாயை அமலாக்கத்துறை அதிகாரிகள் முடக்கியிருந்தனர்.

இந்நிலையில் இந்த பண மோசடி வழக்கில் தொடர்ந்து விசாரணை நடத்தி வந்த அமலாக்கத்துறை அதிகாரிகள், வின்சோ நிறுவனத்துடன் தொடர்புடைய ஆடிட்டர் அலுவலகத்தில் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் பணமோசடி தடுப்புச்சட்டத்தின்படி சட்டவிரோத பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து வங்கிக் கணக்குகளிலும், பிக்சட் டெபாசிட் மற்றும் மியூச்சுவல் பண்டுகளில் இருந்த 192 கோடி ரூபாயை முடக்கி உள்ளதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

# குர்ஆன் சாட்சியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட நியூயார்க் நகர மேயர் ஜோரான் மம்தானி

நியூயார்க், ஜன.02-

அமெரிக்க வரலாற்றில் முதன்முறையாக இஸ்லாமியர் ஒருவர் நியூயார்க் நகர மேயரானார் என்ற வரலாறு படைத்த ஜோரான் மம்தானி, இன்று குர்ஆன் சாட்சியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டு சரித்திரத்தில் இன்னொரு புதிய பக்கத்தை சேர்த்துள்ளார்.



யார் இந்த ஜோரான் மம்தானி? நீங்கள் ‘சலாம் பாம்பே’, ‘மான்சூன் வெட்டிங்’ போன்ற திரைப்படங்கள், ‘ஸோ ஃபார் ஃப்ரம் இந்தியா’ போன்ற ஆவணப்படம் பற்றி அறிந்திருந்திருந்தால், அதனை இயக்கிய மீரா நாயரையும் தெரிந்திருக்கும். அந்த பிரபல இயக்குநர் மீரா நாயர் மற்றும் உகாண்டாவைச் சேர்ந்த மஹ்மூத் மம்தானியின் மகன் தான் இந்த ஜோரான் மம்தானி.

34 வயதான ஜோரான் மம்தானி ஒரு சட்ட வல்லுநர். அவர் தனது தேர்தல் பிரச்சாரங்களில், “அமெரிக்க அரசியலில் மாற்றம் தேவை. இது மக்களுக்கான, அவர்களின் தேவைகளுக்கான அரசியலாக இருக்க வேண்டுமே தவிர உயரடுக்கு மக்களுக்கானதாக இருக்கக் கூடாது” என்று கூறி கவனம் ஈர்த்திருந்தார்.

அவரது பிரச்சாரங்களுக்கு ஆதரவு பெருக அந்த ஆதரவு அலைகளோடு நியூயார்க் மேயர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட மம்தானி, 20 லட்சம் வாக்குகளுக்கும் மேல் பெற்று அபார வெற்றிச் சரித்திரத்தை பதிவு செய்தார். தொடர்ந்து அவர் ஜனவரி 1ம் தேதி நியூயார்க் மேயராக பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டது.

பதவியேற்பிலும் கவனம் ஈர்த்த மம்தானி: அதன்படி அவர் பதவியேற்றுக் கொண்டார். பிரச்சாரங்களில் , வெற்றி உரைகளில் மட்டுமல்லாது பதவியேற்பில் புதுமை செய்துள்ளார் மம்தானி. அவரது பதவியேற்பு விழா இரண்டு கட்டங்களாக திட்டமிடப்பட்டது. அதன்படி, நள்ளிரவு தனிப்பட்ட விழாவில், தனது தாத்தாவின் குர்ஆன் மற்றும் புகழ்பெற்ற கருப்பின எழுத்தாளர் ஆர்டுரோ ஸ்காம்பர்க் வைத்திருந்த குர்ஆன் சாட்சியாக பதவியேற்றார். இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சி மான்ஹாட்டன் நகரின் கைவிடப்பட்ட ஒரு ரயில் நிலையத்தின் சுரங்கப்பாதை முன்னர் நடைபெற்றது.

பின்னர் ஒரு சிற்றுரை ஆற்றிய மம்தானி, “இது என் வாழ்நாளுக்கான கவுரவமும், உரிமையாகும் ஆகும்.” என்றார்.

மேலும், மான்ஹாட்டன் சப்வே பற்றி அவர் கூறுகையில், “இது நமது நகரத்தின் உயிர்ப்பு, சுகாதாரம் மற்றும் பாரம்பரியத்துக்கு பொது போக்குவரத்தின் முக்கியத்துவத்துக்கான ஒரு சான்றாக திகழ்கிறது.” என்றார்.

தொடர்ந்து, மக்கள் பங்கேற்கும் பெரிய விழா நகர மன்றம் முன்பு நடைபெற உள்ளது. அந்தப் பதவி பிரமாணத்தை அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பெர்னி சாண்டர்ஸ் செய்துவைக்கிறார்.

மம்தானி அமெரிக்க நகர மேயர்களில் முதல் தெற்காசிய, ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்தவர். நியூயார்க்கின் முதல் முஸ்லிம் மேயர். அமெரிக்க அரசியலில் கூர்ந்து கவனிக்கப்படும் ஓர் அரசியல்வாதியாக இருக்கிறார்.

# திமுகவை வீழ்த்தவே பாஜகவுடன் கூட்டணி என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்: இபிஎஸ் அறிவுரை

சென்னை, ஜன.02-

எஸ்ஐஆர் பணியில், அதிமுகவினர் ஒருவர் பெயரும் விடுபடாத வகையில் மாவட்ட செயலாளர்கள் பணியாற்ற வேண்டும் என்று பொதுச் செயலாளர் பழனிசாமி அறிவுறுத் தியுள்ளார்.



தமிழக சட்டப்பேரவை தேர்தல் இன்னும் 2 மாதங்களில் அறிவிக்கப்பட உள்ளது. எஸ்ஐஆர் பணிகளையும் தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற் கொண்டு வருகிறது. அதில், படிவங்களை முறையாக பூர்த்தி செய்யாமல் அளித்த 12 லட்சம் பேரிடம் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. இந்த பரபரப்பான சூழலில் அதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், பொதுச்செயலாளர் பழனிசாமி தலை மையில், சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பழனிசாமி பங்கேற்று, மாவட்ட வாரியாக நடைபெற்று வரும் கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்து நிர்வாகி களிடம் கேட்டறிந்தார். பின்னர் கூட்டத்தில் அவர் பேசியதாவது: சட்டப்பேரவை தேர்தல் அறிவிப்புக்கு இன்னும் 2 மாதங்களே உள்ள நிலையில், கட்சியினர் அனைவரும் தீவிர களப்பணியாற்ற வேண்டும். எஸ்ஐஆர் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணியில் அதிமுகவினர் சிறப்பாக செயல்படவில்லை என தகவல்கள் வருகின்றன. வாக்குச்சாவடி அளவில் நிர்வாகிகள் தீவிர பணியாற்றுவதை மாவட்ட செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தமிழகம் முழுவதும் நிரந்தரமாக குடியேறியதாக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 66 லட்சம் பேரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க, வாக்குச்சாவடி முகவர்கள், பாக கிளை நிர்வாகிகள் அனைவரும் முனைப்புடன் செயல்பட வேண்டும். அதிமுகவினர் ஒருவர் பெயரும் விட்டு விடாமல் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

இறந்தவர்கள் உள்ளிட்டோரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க திமுகவினர் முயலக்கூடும். அதை அதிமுகவினர் தடுக்க வேண்டும். முறையாக படிவங்களை பூர்த்தி செய்யாத 12 லட்சம் பேரிடம் விளக்கம் கேட்டுநோட்டீஸ் அனுப்பியுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதில் பொதுமக்கள், அதிமுகவினர் ஒருவரின் பெயரும் நிராகரிக்காமல், அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் நீடிக்க, தேவையான ஆதாரங்களை எடுத்து தந்து உதவ வேண்டும். வரும் ஜன.3, 4 தேதிகளில் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. அதை ஆக்கப்பூர்வமாக அதிமுகவினர் பயன்படுத் திக்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

ஐடி விங் நிர்வாகிகளின் பணி திருப்திகரமாக இல்லை. பிற கட்சிகளின் வேகத்தை மிஞ்சும் வகையில் அதிமுகவின் செயல்பாடுகள் மக்களை சென்றடைய வேண்டும். 2026 தேர்தலில் அதிமுக கூட்டணி வெற்றிக்கு இந்த விங் முக்கிய பங்காற்ற வேண்டும். திமுகவில் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி முகவர்களை விட, அதிமுக முகவர்கள் குறைவாக உள்ளனர். திமுகவை விட அதிக முகவர்களை விரைவாக நியமிக்க வேண்டும். தொகுதி மக்களுடன் அனைவரும் தொடர்பில் இருக்க வேண்டும். தேர்தல் கூட்டணி முடிவுகள் விரைவில் எடுக்கப்படும். சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அதை நான் பார்த்துக்கொள்கிறேன். தொகுதியில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அதிமுக பாஜக கூட்டணி குறித்து கிராமப் புறங்களில் எதிர்மறை கருத்துகள் உள்ளன. பொது எதிரியை வீழ்த்துவதற்கான கூட்டணி இது என்பதை மக்களை சந்தித்து விளக்க வேண்டும். அதிமுக அரசின் 10 ஆண்டு சாதனைகள், எம்ஜிஆர், ஜெயலலிதா செயல்படுத்திய முத்தான திட்டங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லி, அத்திட்டங்கள் மூலம் அவர்கள் பயன்பெற்றிருப்பதை கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்ட செயலாளரும் தங்களது மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க, ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 6 பேர் கொண்ட பட்டியலை தலைமைக்கு பரிந்துரைக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர்களின் பரிந்துரை, மாவட்ட பொறுப்பாளர்களின் பரிந்துரை, தொகுதியில் வேட்பாளரின் செல்வாக்கு உள்ளிட்ட அம்சங்களை ஆராய்ந்து வேட்பாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். நமக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் சிலவற்றை கூட்டணி கட்சிகளுக்கு கொடுக்க வேண்டி இருக்கும். அதை ஏற்றுக்கொண்டு, கூட்டணி வெற்றிக்கு மாவட்ட செயலாளர்கள் பாடுபட வேண்டும். இவ்வாறு அவர் பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் துணை பொதுச் செயலாளர்கள் கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி, பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கூட்டத்தின் முடிவில், திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த மக்கள் நீதி மய்யம் மற்றும் ஓபிஎஸ் அணியை சேர்ந்த நிர்வாகிகள், பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்.

# சென்னை 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: அயனாவரம் பெரம்பூர் சுரங்கப் பணி நிறைவு

சென்னை, ஜன.02-

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 3வது வழித்தடத்தில் ஒரு பகுதியாக, அயனாவரம் பெரம்பூர் வரை 861 மீட்டர் தொலைவிலான சுரங்கப்பாதை பணி வெற்றிகரமாக நிறை வடைந்தது.

சென்னையில் 3 வழித்தடங்களில் 116.1 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இவற்றில் மாதவரம் சிறுசேரி சிப்காட் வழித்தடமும் (45.4 கி.மீ.) ஒன்று. மாதவரம் பால்பண்ணை பகுதியில் இந்த சுரங்கப்பாதை பணி முதன்முதலாகத் தொடங்கியது.

இதன் ஒருபகுதியாக, அயனாவரம் நிலையத்தில் இருந்து பெரம்பூர் நிலையம் வரையிலான 861 கி.மீ. தொலைவுக்கு கீழ்பாதையில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. இதற்காக, ‘மேலகிரி’ என்ற சுரங்கம் தோண்டும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில், இப்பணி நேற்று முன்தினம் முடிவடைந்து, ‘மேலகிரி’ இயந்திரம் பெரம்பூரை வெற்றிகரமாக வந்தடைந்தது. இந்த நிகழ்வை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள், டாடா ப்ராஜெக்ட்ஸ் நிறுவன அதிகாரிகள் உற்காகமாகக் கொண்டாடினர்.

இதுகுறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் இதுவரை 19 சுரங்கம் தோண்டும் பணிகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. சுரங்கம் தோண்டும் இயந்திரமான ‘மேலகிரி’, பெரம்பூர் ரயில் நிலைய தண்டவாளங்கள் மற்றும் நடைமேடைக்கு அடியிலும், அதிக மக்கள் தொகை கொண்ட மற்றும் நெருக்கமான கட்டிடங்கள் நிறைந்த பகுதிகளுக்கு அடியிலும் சுரங்கப்பாதை அமைக்கும் பணியை வெற்றிகரமாக முடித்துள்ளது.

இந்த வழித்தடத்தில் இருந்த 32க்கும் மேற்பட்ட ஆழ்துளைக்கிணறுகள் முறையாகக் கையாளப்பட்டன. பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில், அக்கிணறுகளுக்கு பதிலாக மாற்றுநீர் ஆதாரங்கள் மெட்ரோ நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஆங்கிலப் புத்தாண்டு கோலாகலம்: சென்னையில் கிறிஸ்தவ ஆலயங்களில் நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனை

சென்னை, ஜன.02-

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் நேற்று நள்ளிரவு சிறப்பு திருப்பலியும், சிறப்பு ஆராதனைகளும் நடைபெற்றன. இதில் ஆயிரக்கணக் கான கிறிஸ்தவர்கள் புத்தாடை அணிந்து உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

2025ம் ஆண்டு நேற்றுடன் நிறைவடைந்து இன்று 2026 புத்தாண்டு பிறந்துள்ளது. இதையொட்டி கிறிஸ்தவ ஆலயங்களில் புத்தாண்டு உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. சாந்தோம் பேராலயத்தில் சென்னை மயிலை உயர் மறை மாவட்ட பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி தலைமையில் நேற்று நள்ளிரவு 11.30 மணி அளவில் சிறப்பு திருப்பலியும் புத்தாண்டு ஆராதனையும் நடந்தன. இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் புத்தாடை அணிந்து உற்சாகமாகக் கலந்துகொண்டனர்.

இதேபோல், பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி திருத்தலம், மயிலாப்பூர் பிரகாச மாதா ஆலயம் (லஸ் சர்ச்), ராயப்பேட்டை காணிக்கை அன்னை ஆலயம், எழும்பூர் திருஇருதய ஆண்டவர் திருத்தலம், புதுப்பேட்டை புனித அந்தோணியார் ஆலயம், பாரிமுனை தூய மரியன்னை இணை பேராலயம், பரங்கிமலை புனித தோமையார் ஆலயம் உள்ளிட்ட கத்தோலிக்க தேவாலயங்களிலும் நள்ளிரவு சிறப்பு திருப்பலி நிறைவேற்றப் பட்டது. ஆலயத்துக்கு வந்திருந்தவர்கள் புத்தாண்டு வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

மேலும், சிஎஸ்ஐ திருமண்டல தலைமை ஆலயமான கதீட்ரல் பேராலயம், பழமை வாய்ந்த வேப்பேரி புனித அந்திரேயா ஆலயம், மயிலாப்பூர் குட் ஷெப்பர்டு ஆலயம், ராயப்பேட்டை வெஸ்லி ஆலயம், எழும்பூர் புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களிலும் புத்தாண்டு சிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன.

புறநகர் பகுதிகளிலும் நேற்று நள்ளிரவு சிறப்பு திருப்பலியும் ஆராதனையும் நடை பெற்றன. மறைமலைநகர் பாவேந்தர் சாலையில் உள்ள தூய விண்ணரசி அன்னை ஆலயத்தில் பங்குத்தந்தை அலெக்சிஸ் மனோகர் தலைமையில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

தாம்பரம் பாத்திமா அன்னை ஆலயம், குரோம்பேட்டை அமலஉற்ப அன்னை ஆலயம், கூடுவாஞ்சேரி நல்மேய்ப்பர் ஆலயம், ஊரப்பாக்கம் ஆரோக்கிய அன்னை ஆலயம், காட்டாங்கொளத்தூர் புனித லூர்து அன்னை ஆலயம், ரயில் நகர் புனித அந்தோணியார் ஆலயம், எம்டிசி நகர் ஆரோக்கிய அன்னை ஆலயம் உள்ளிட்ட ஆலயங்களிலும் புத்தாண்டு சிறப்பு திருப்பலியும், ஆராதனையும் நடைபெற்றன.



## விருதுநகர் மாவட்டம் வத்ராயிருப்பு தாலுகாவில் அன்னதானவிழா

விருதுநகர், ஜன.2-

விருதுநகர் மாவட்டம் வத்ராயிருப்பு தாலுகாவில் மகாராஜபுரம் கிராமத்தில் சதுரகிரி புனித பாதையாத்திரை மற்றும் மாபெரும் அன்னதான விழா வேல்யூ ரியாலிட்டி குரூப் ரி. மகேந்திரன் தலைமையில் கடந்த 31.12.2025 காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரை அன்னதான நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த அன்னதான நிகழ்ச்சியில் 5000 க்கும் மேற்பட்ட பக்தர்களும் பொதுமக்களும் பங்கேற்று சிறப்பித்தனர்,15 வருடங்களாக இந்த அன்னதான நிகழ்ச்சியை ரி. மகேந்திரன் நடத்தித் தருகிறார்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் சிறந்த ஆன்மீக செயலுக்காகவும் இந்த நிகழ்ச்சியை முன்னின்று நடத்தித்தருகிறார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்களும் பக்தகோடிகளும் ரி.மகேந்திரனுக்குமனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுகளையும்தெரிவித்துள்ளனர்.




## சிவகங்கை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பிறந்தநாள் விழா.

சிவகங்கை ஜன02-

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக்கழக திமுக செயலாளர்கேஆர். பெரியகருப்பன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் முழுவதும் கபாடி, கிரிக்கெட் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகள் , சிறப்பு பூஜைகள் , முதியோர் இல்லங்களில் உணவு, ஏழை எளிய தொண்டர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் என பல்வேறு வகையான கழகப்பணிகளை மேற்கொண்டு தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.அந்த வகையில் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கொத்தமங்கலம் துரை.கண்ணன் அவர்களின் ஏற்பாட்டில்ஜி என் எஸ். குழந்தை மற்றும் முதியோர் காப்பகத்தில் அறுசுவை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கி கொண்டாடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



## அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பிறந்தநாள் விழா

காரைக்குடி ஜன02-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி ஏற்பாட்டில் குன்றக்குடி, கோட்டையூர் , பள்ளத்தூர், காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளில் இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கியும் கோவில்களில் அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பெயரால் சிறப்பு பூஜை புணஷ்காரங்களை நடத்தி பின்னர் அமைச்சர் பெரியகருப்பன் பிறந்ததினத்தில் பிறந்த ஆறு குழந்தைகளுக்கு தங்கமோதிரங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியின் போது அழகு, கண்ணன் , அன்புக்கரசி ,முனீஷ், சந்தோஷ், சோலை ,பள்ளத்தூர் சரோஜா , நாராயணன், வெள்ளையம்மாள் , செல்வம் , குன்றக்குடி மாணிக்கம் , சூரக்குடி கருப்பையா , சமூக சேவகர் செட்டிநாடு சோலையன் உள்ளிட்ட மகளிர் சுய உதவிக்குழுவினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்..இதுகுறித்து பேசிய பள்ளத்தூர் கே.எஸ். ரவி அவர்கள் எங்களது மாவட்டத்தின் எந்நாளும் அமைச்சர், கேஆர். பெரியகருப்பன் அவர்கள் பிறந்தநாளை லெகு சிறப்பாகக் கொண்டாடி வரும் இந்த வேளையில் அமைச்சர் பிறந்த நாளில் பிறந்த இப்பகுதி குழந்தைகள் ஆறு பேருக்கு தங்க மோதிரம் வழங்கியுள்ளோம் எனவும் எங்களது அமைச்சர் நீடுழி பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு காலம் வாழ வேண்டுமெனவும் தெரிவித்தார்...

## தமிழக விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் பாதுகாப்பு கட்சியின் தலைவர் சத்தியம் சரவணன் தங்கள் கட்சியின் கோரிக்களை, பட்டியலிட்டு உரையாடினார்

திருச்சிராப்பள்ளி ஜன02-

திருச்சி பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் தமிழக விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் பாதுகாப்பு கட்சியின் தலைவர் சத்தியம் சரவணன் வி.கி.நி.லி. கூறியதாவது:". தங்கள் கட்சியின் கோரிக்களை, பட்டியலிட்டு உரையாடினார். 1. ஆடு வளர்ப்போர் நலவாரியம் அமைக்க வேண்டும் 2. வனத்துறையில் ஆடு மேய்க்க பழைய பட்டி பாஸ் முறையை அமல்படுத்த வேண்டும் . 3. தமிழகம் முழுவதும் பிராய்லர் கோழிக்கு விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதோ அதே போல ஆட்டுக்கறிக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் ‘ 4. கால்நடை வளர்ப்போர் இடம்விட்டு இடம் பெயர்ந்து ஆடு, மாடு மேய்ச்சலுக்காக காடுகளில் தனியாக மேய்ச்சல் பகுதிகளில் இருப்பதால், ஆடு, மாடு மேய்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த " தமிழக சட்டமன்றத்தில் அவர்களை அதாவது கால்நடை வளர்ப்போரை பாதுகாக்க சட்டம் இயற்றிட வேண்டும் என்றும். 5. ராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழகத்திலேயே அதிகப்படியான மக்கள் ஆடு மற்றும் மாடுகளை வளர்க்கும் தொழில் செய்து வருவதால் அங்கே ஆடு மாடு வளர்க்கும் தொழில் அபிவிருத்திக்காக பல தொழில்நுட்பங்களை அடக்கிய பிரம்மாண்டமான கால்நடை பூங்கா அமைத்து கால்நடை வளர்ப்பு போரின் பொது அறிவு பெருக உதவிடும் . . என்ற நோக்கத்தோடு அரசு கால்நடைப் பூங்கா அமைத்திட கோரிக்கையாக வைக்கிறோம் என்றும் " தமிழகம் எங்கும் கால்நடை மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தடுப்பு ஊசிகள் தங்கு தடையின்றி கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ; 7. தமிழகம் முழுவதும் பனைமர கல் இறக்க அனுமதி அளிக்க வேண்டும் என்றும் 8. தற்போது செயல் இழந்து இருக்கும் பனைமர வாரியத்தை சீர்படுத்தி செயல்படுத்த வேண்டும் என்றும் ‘ 9. பதநீரை மற்ற குளிர் பானங்களைப் போல பதப்படுத்தி எல்லா குளிர்பானங்களும் கடைகளில் எப்போதும் விற்பனை செய்யப்படுவது போல பதநீரையும் விற்பனை செய்ய நடவடிக்கை அரசு எடுக்க வேண்டும் என்றும் ’10. தென் மாவட்டத்தில் அதிகமான பனை மரங்களும் அதிகமான பனை மர தொழிலாளர்களும் இருப்பதால் பனை மரத்தில் கிடைக்கும் பணங்கிலங்கில் இருந்து பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்றும் 11. தமிழக ரேஷன் கடைகளில் சர்க்கரைக்கு பதிலாக கருப்பட்டியை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ‘ 12. மக்களுக்கு உடல்ரீதியான கெடுதல்களை ஏற்படுத்தும் பால் பாக்கெட்டுகளை அறவே ஒழித்து பால் பாக்கெட் தயாரிக்கும் நிறுவனங்களை உடனடியாக இழுத்து மூட வேண்டும் என்றும் , 13. ரேஷன் கடைகளில் காலை மாலை இருவேளையும் அரசு நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலையில் பசு மாட்டு பாலை பொதுமக்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், 14. இன்றைய உணவு பழக்கத்தால் கடுமையான நோய்கலெல்லாம் பெருகி உள்ள மிகக் கடுமையான காலகட்டத்தில் மனிதர்களுக்கு கேன்சர் போன்ற புதிய நோய்களை ஏற்படுத்தும் பிராய்லர் வெள்ளை கோழி பண்ணைகளை அதிரடியாக மூட உத்தரவிட வேண்டும் என்றும்

பிராய்லர் கோழி அளவிற்கே உற்பத்தியை பெருக்குவதற்கு இளம் தொழில் பயில்வோருக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு முறை பற்றி அறிவித்தும் பயிற்சி அளித்தும் பிராய்லர் கோழிக்கு இணையாக நாட்டுக்கோழிகளை உற்பத்தி செய்யும் அளவுக்கு பயிற்சி அளித்து வங்கி கடன்களை வழங்கி நாட்டுக்கோழி வளர்ப்பு முறையை தெளிவான முறையில் யிற்சியின் மூலம் மக்களுக்கு அளித்து.. இளம் தொழில் முனைவோர் நாட்டு கோழி வளர்க்க அரசு வங்கி கடன் உதவி செய்து உணவு முறையில் மக்களை காப்பாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ’16. ‘ நாட்டுக்கோழி பண்ணை அமைப்பதற்கு மத்திய மாநில அரசுகள் எளிதாக கடன் வழங்க வேண்டும் என்றும் "17. விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு நிவாரணத்து வகைகளை உடனடியாக வழங்கி அவர்கள் கண்ணீர் துடைக்க வேண்டும் என்றும் , 18. தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமுல்படுத்தி இளைஞர் சமுதாயத்தையும் தமிழ் சமூகத்தையும் காக்க வலுவான சட்டத்தை இயற்றி தமிழகத்தை காக்க வேண்டும் என்றும் வேண்டும் 19. காவல்துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றுபவர்களுக்கு சிறப்பு சப் . இன்ஸ்பெக்டர் ஷி.ஷி.மி. பணிப் பதவி உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் :’20. தமிழக விவசாயிகளுக்கு உரம் கலப்படம் இல்லாமலும் பட்டுப்பாடு இல்லாமலும் விவசாயிகளுக்கு கிடைக்க தமிழக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் 21. தமிழகத்தில் விவசாய கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் விவசாய கடனை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் தமிழக விவசாயிகள் கால்நடை வளர்ப்போர் பாதுகாப்பு கட்சியின் தலைவரும் அவர் கட்சியைச் சார்ந்த தொண்டர்களும் பத்திரிகையாளர் சந்திப்பில் தங்களது கட்சியின் கோரிக்கைகளாக முன் வைத்து உரையாற்றினர்.



## "தமிழக சட்டப்பேரவையில் கணக்கை தொடங்கும் இலக்குடன் பணிகள்"

### எஸ்டிபிஜ கட்சி மாநில தலைவர் தகவல்

திருநெல்வேலி:, ஜன.2-

தமிழக சட்டப் பேரவையில் தங்கள் கட்சி சார்பில் உறுப்பினர் கணக்கை தொடங்க வேண்டும் என்பதை மனதில் வைத்து பணிகளை மேற்கொண்டுள்ளதாக எஸ்டிபிஜ கட்சி மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் தெரிவித்தார்.

கடந்த தேர்தலின்போது அதிமுக கூட்டணியில் எஸ்டிபிஜ கட்சி இருந்தது. தற்போது பாஜகவுடன் அதிமுக கூட்டணி வைத்துள்ளதால் அந்த கூட்டணியிலிருந்து எஸ்டிபிஜ கட்சி வெளியேறியது. தமிழக சட்டப்பேரவை தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் இதுவரை கூட்டணி குறித்த முடிவை அக்கட்சி எடுக்கவில்லை.

இந்நிலையில் திருநெல்வேலியில் மாவட்ட அளவிலான பாக முகவர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது. மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் கட்சி கொடியை ஏற்றி வைத்தார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் எஸ்டிபிஜ கட்சிக்கு 221 தொகுதிகளில் அமைப்புகள் உள்ளது. தற்போதைய தேர்தலில் போட்டியிட்டு சட்டப்பேரவை உறுப்பினர் கணக்கை தொடங்கும் வகையில் பணிகளை செய்து வருகிறோம். ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்க வேண்டும் என்ற எண்ணம் தற்போதைக்கு இல்லை.

எஸ்டிபிஜ கூட்டணி குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை.




வரும் சட்டப்பேரவை தேர்தலில் கூட்டணி அமைவது குறித்து எங்கள் கட்சியின் அகில இந்திய மாநாட்டுக்கு பிறகு முடிவெடுக்கப்படும். அகில இந்திய மாநாடு வரும் 20ம் தேதி நடைபெறவுள்ளது.

தாமிரபரணி நதியை சீரமைக்க போர்க்கால அடிப்படையில் சிறப்பு திட்டங்களை அறிவித்து நதியை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகத்தை அமைத்ததற்கும், காயிதே மில்லத் பெயரில் நூலகம் அமைக்க அடிக்கல் நாட்டியதற்கும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

மிகப்பெரிய குளறுபடிகளுடன் எஸ்ஐஆர் பணிகள் நடந்துள்ளது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் இருக்கும் பிழையை சரி செய்ய மக்களை ஆவணங்களை கேட்டு அலைக்கழிக்கின்றனர். 12 லட்சம் வாக்காளர்களை சந்தேக வாக்காளர்களாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இருக்கும் வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தேர்தல் ஆணையம் செயல்படுகிறது. மாஞ்சோலை தேயிலை தோட்டத்தை சேர்ந்த பணியாளர்கள் ஆயிரம் பேரின் பெயர்கள் நிரந்தர இடம் மாற்றம் என்ற அடிப்படையில் நீக்கி உள்ளது சரியானது அல்ல. அங்கு நடைபெறும் சிறப்பு முகாமுக்கு தங்கள் பெயர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள முயலும் நிலையில் அதிகாரிகள் அங்கு செல்லாததும் சரியானது அல்ல. அங்கு முகாம் நடத்தி வாக்காளர்களை மீண்டும் சேர்க்க வேண்டும்.

சென்னையில் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில் மாணவர்கள் கல்வி இதனால் தடையாகி விடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு அரசு விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.



## சிகரெட், புகையிலைப் பொருட்களுக்கு கூடுதல் கலால் வரி பிப்.1 முதல் அமல்

புதுடெல்லி, ஜன.2-

சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கான கூடுதல் கலால் வரி பிப்ரவரி 1ம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது. அதன்படி, சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களுக்கு தற்போது விதிக்கப்படும் 40% ஜிஎஸ்டி வரியுடன் சேர்த்து இந்த கலால் வரி கூடுதலாக வசூலிக்கப்படும். இதனால் இவற்றின் விலை பலமடங்கு உயரும் எனத் தெரிகிறது.இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அரசாணையில், ''சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கான கூடுதல் கலால் வரி பிப்ரவரி 1ம் தேதி முதல் அமல்படுத்தப்படும். சிகரெட்டுகளின் நீளம் மற்றும் வகையைப் பொறுத்து 1,000 சிகரெட் குச்சிகளுக்கு ரூ.2,050 முதல் ரூ.8,500 வரை கூடுதல் கலால் வரியை அரசாங்கம் விதித்துள்ளது. சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களுக்கு தற்போது விதிக்கப்படும் 40% ஜிஎஸ்டி வரியுடன் சேர்த்து இந்த கலால் வரி கூடுதலாக வசூலிக்கப்படும்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.மத்திய கலால் (திருத்த) மசோதா 2025, நடந்து முடிந்த நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது. அப்போது நாடாளுமன்றத்தில் பேசிய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ''ஜிஎஸ்டி இழப்பீட்டு செஸ் காலாவதியான பிறகு, புகையிலை மற்றும் அது தொடர்பான பொருட்கள் மீதான கலால் வரிகளை திருத்தும் (உயர்த்தும்) நோக்கில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. வசூலிக்கப்படும் வருவாய், பகிரக்கூடிய நிதிக்குச் செல்லும் என்றும், பின்னர் அது மாநிலங்களுக்கு 41% மறுபகிர்வு செய்யப்படும்.

பல நாடுகள் புகையிலை வரிகளை ஆண்டுதோறும் திருத்தி அமைக்கின்றன. பல நாடுகள் அதை பணவீக்கத்துடன் இணைக்கின்றன. இந்தியாவிலும்கூட ஜிஎஸ்டிக்கு முன்பும் புகையிலைப் பொருட்கள் மீதான வரி ஆண்டுதோறும் உயர்த்தப்பட்டது. இதன் நோக்கம், மக்கள் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கத்துக்கு அடிமையாகாமல் இருக்க வேண்டும் என்பதே.ஜிஎஸ்டிக்கு முன்பு இருந்த கலால் வரியை அரசாங்கம் மீண்டும் கொண்டு வருகிறது. அரசாங்கம் எடுத்த பல்வேறு முயற்சிகள் காரணமாக 2018 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் 1.12 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான புகையிலை சாகுபடி நிலங்கள் மற்ற பயிர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. அந்த நிலங்களில், கரும்பு, நிலக்கடலை, எண்ணெய் பனை, பருத்தி, மிளகாய், மக்காச்சோளம், வெங்காயம், பயிறு வகைகள், மஞ்சள் போன்றவை பயிரிடப்படுகின்றன'' என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி விழாவிற்கு மட்டும் ஏன் இத்தனை சிறப்பு தெரியுமா?

வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு என்றாலே அனைவருக்கும் முதலில் நினைவிற்கு வருவது ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயம் தான். இங்கு நடக்கும் வைகுண்ட ஏகாதசி தனித்துவமானது. வைகுண்ட ஏகாதசி உற்சவத்தின் 21 நாட்களும் உற்சவ மூர்த்தியான நம்பெருமாள் விதவிதமான அலங்காரங்களில் எழுந்தருளி சேவை சாதிப்பார். இந்த விழா பற்றி பலரும் அறியாத சிறப்புகள் சிலவற்றை தெரிந்து கொள்ளலாம்.

வைகுண்ட ஏகாதசி அன்று அனைத்து வைணவ தலங்களிலும் அதிகாலையில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்த்தப்படும். இருந்தாலும் மற்ற எந்த திருத்தலத்திற்கும் இல்லாத வகையில் ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி விழா தனிச்சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. சொர்க்க வாசல் திறக்கப்படும் நேரம் கூட ஸ்ரீரங்கத்தை ரங்கநாதர் ஆலயத்தை கணக்கிட்ட மற்ற பெருமாள் கோவில்களில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்வு நடத்தப்படும். அது மட்டுமல்ல, மற்ற அனைத்து பெருமாள் கோவில்களிலும் வைகுண்ட ஏகாதசி அன்று மட்டுமே உற்சவம் நடத்தப்படும். ஆனால் ஸ்ரீரங்கத்தில் மட்டுமே வைகுண்ட ஏகாதசி 21 நாள் விழாவாக நடத்தப்படும்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் வைகுண்ட ஏகாதசிக்கு முந்தைய பத்து நாட்கள் பகல் பத்து என்றும், வைகுண்ட ஏகாதசிக்கு பிந்தைய பத்து நாட்கள் இரா பத்து உற்சவம் என்றும் நடத்தப்படும். பெருமாள் எப்படிப்பட்ட கருணை மனம் கொண்டவர், பக்தனுக்காக இறங்கி வரக் கூடியவர் என்பதையும் உணர்த்துவதே இந்த விழாவின் உன்னதமான நோக்கமாகும். இதை ஸ்ரீரங்கத்தில் இன்றும் உற்சவமாக நடத்திக் காட்டுவார்கள். இதன் உண்மையான கதை, அர்த்தம் தெரிந்தால் கண்டிப்பாக அனைவரும் மெல்சிலிர்த்து போவார்கள். ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி விழாவின் சிறப்பை சொல்ல 3 விதமான சம்பவங்களை குறிப்பிடுவார்கள்.


பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கம் ரங்கநாதரை தரிசனம் செய்வதற்கு ஒருமுறை திருமங்கை ஆழ்வார், கார்த்திகை மாதத்தில் வந்திருந்தார். கார்த்திகை மாதத்தில் பெருமாளை தரிசனம் செய்வது மிகவும் விசேஷமானதாகும். அப்போது பெருமாளை மனமுருகி பல விதமான பாடி, வழிபட்டார். அவரது பக்தியை கண்டு மனம் உருகிப் போன ரங்கநாதப் பெருமாள், அவருக்கு காட்சி கொடுத்து, "என்ன வரம் வேண்டும்" என கேட்டார். அதற்கு திருமங்கை ஆழ்வார், தனக்காக எதுவும் கேட்காமல், நம்மாழ்வார் பாடிய ஆயிரம் பாசுரங்களை கேட்க வேண்டும் என பெருமாளிடம் வேண்டினார். அதை ஏற்றுக் கொண்ட பெருமாள், எப்போது கேட்கலாம் என திருமங்கை ஆழ்வாரிடமே கேட்டார். அப்படி திருமங்கை ஆழ்வார் குறித்து சொன்னது தான், வைகுண்ட ஏகாதசிக்குபிந்தைய இரா பத்து உற்சவம்.

அதற்கு சிறிது காலத்திற்கு பிறகு ரங்கநாதரை தரிசனம் செய்ய வந்த நாதமுனிகள், நம்மாழ்வார் பாடிய ஆயிரம் பாடல்களை மட்டுமே கேட்கிறாயே, அதே போல் மற்ற ஆழ்வார்கள் பாடிய இன்னும் 3000 பாடல்கள் மீதமுள்ளதே அதையும் கேட்டு அருள் செய்யக் கூடாதா என பெருமாளிடம் கேட்க, பெருமாளும் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்டது தான் முந்தைய பகல் பத்து உற்சவம். இப்படி பகல் பத்து, இரா பத்து என 20 நாட்களும் எழுத்து வடிவில் இருக்கும் நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்களையும் பாடியும் நடித்தும் காட்டுவார்கள். இது இன்று வரை நடைபெற்று வருகிறது. இதற்கு அறையர் சேவை என்று பெயர்.

அதே போல் வைகுண்ட ஏகாதசி விழாவின் போது, பகல் பத்து உற்சவத்தின் நிறைவு நாளில், அன்று ஒரே ஒரு நாள் மட்டும் நம்பெருமாள், மோகினி அவதாரத்தில் காட்சி தருவார். பெருமாள் மீது கொண்ட அதீத மரியாதை காரணமாக, மகாலட்சுமியை மட்டும் வழிபட்டு, அவருக்கு மட்டும் சேவைகள் செய்து வந்தார் பராசர பட்டர் என்ற பக்தர். மகாலட்சுமிக்கு அவர் செய்யும் சேவைகளை தானும் ஏற்க ஆசை கொண்ட பெருமாள், மகாலட்சுமியை போல் வேடமிட்டு, அவரது நகைகளை அணிந்து கொண்டு சென்று, எனக்கு சேவை செய்ய மாட்டாயா என கேட்டார். பக்தர் ஒருவரை பெருமாளே தேடி வந்து அவரது சேவைகளை கேட்டு பெற்றார் என்றால் அவரது பக்தி எப்படிப்பட்டதாக இருக்கும் பாருங்கள்.

இப்படி தன்னுடைய அடியார்கள், பக்தர்கள் ஆகியோர் முன் வைக்கும் விண்ணப்பங்களை உடனடியாக நிறைவேற்றி வைக்கக் கூடிய கருணாமூர்த்தியாக பள்ளிகொண்டுள்ளார் ரங்கநாதர். அவரது கருணையை, அருளை அனைவரும் பெற்று, அவரது திருவடியை அடைய வேண்டும் என்பதற்காக தான் ஸ்ரீரங்கத்தில் மட்டும் இத்தனை விசேஷமாக வைகுண்ட ஏகாதசி விழா நடத்தப்படுகிறது.

# மரணம் எப்போது, எப்படி வரும்...துல்லியமாக கணித்து சொல்லும் அதிசய கோவில்



இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி அதிசயிக்க வைக்கும் மர்மமான பல ஆலயங்கள் உள்ளன. அப்படி ஒருவருடைய வாழ்க்கை மட்டுமின்றி மரணம் கூட எப்போது நடக்கும் என்பதை மிக துல்லியமாக கணித்து சொல்லும் ஒரு அதிசய கோவில் உள்ளது. அது மட்டுமல்ல வாழ்க்கையில் இருக்கும் பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்கு சில எளிய பரிகாரங்களையும் சொல்லி, அவற்றை தீர்க்க ஆன்மீக ரீதியாக வழியும் காட்டுகிறார்கள்.

உங்களின் கடந்த காலம், நிகழ்காலம் மட்டுமல்ல உங்களுக்கு எப்போது, எப்படி மரணம் நிகழும் என்பதை கூட துல்லியமாக சொல்லும் ஒரு கோவில் உள்ளது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? உண்மை தான் இப்படிப்பட்ட அதிசய கோவில் நம்முடைய தமிழ்நாட்டில் தான் உள்ளது. அந்த அதிசய கோவில் வேறு எதுவும் கிடையாது. வைத்தீஸ்வரன் கோவில் தான்.

பொதுவாக வைத்தீஸ்வரன் கோவில் என்றால் அனைவருக்கும் நினைவிற்கு வருவது நாடி ஜோதிடம் தான். இன்று வாழும் ஒருவருடைய வாழ்க்கையில் என்ன நடக்கும் என்பதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஓலை சுவடிகளில் எழுதி வைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த ஓலைச்சுவடிகள் சாதாரண மனிதர்களால் எழுதப்பட்டது கிடையாது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முனிவர்கள், ரிஷிகளால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது. இவற்றில் பெரும்பாலானவை அகத்திய முனிவரால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஒருவரின் தலைவிதி எப்படி இருக்கும் என்பதை அவர் பிறப்பதற்கு முன்பே எழுதி வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

அது எப்படி ஒருவரின் வாழ்க்கை, தலைவிதியை பற்றி அவர் பிறப்பதற்கு முன்பே எழுதி வைக்க முடியும்? அனைவருக்கும் அவர்களுக்கான ஏடு இருக்குமா? என்ற கேள்வி தோன்றலாம். இப்படி ரிஷிகளால் எழுதி வைக்கப்பட்ட ஏடுகள் எனப்படும் ஓலைச்சுவடிகள், யார் ஒருவருக்கு நாடி ஜோதிடம் பார்க்க வேண்டும் என்ற விதி இருக்கிறதோ அவர்களுக்கு மட்டுமே ஏடுகள் எடுத்தப்பட்டு இருக்கும். மற்றவர்களுக்கு இருக்காது என சொல்லப்படுகிறது. கை விரல் ரேகையை மட்டும் வைத்து இந்த ஏடுகள் எடுக்கப்பட்டு, அவற்றில் அந்த நபரின் பெயர், பெற்றோர் பெயர் உள்ளிட்ட சில முக்கிய, அடிப்படை விஷயங்கள் மட்டும் சரி பார்க்கப்பட்டு, துல்லியமாக அவர்களின் வாழ்க்கை பற்றி விபரங்களை சொல்கிறார்கள்.

நாடி ஜோதிடத்தில் பல காண்டங்களாக பிரித்து பலன் சொல்லுவார்கள். இவற்றில் ஆயுள் காண்டம் என்ற ஒரு உள்ளது. அதில் உங்களின் வாழ்நாள், உங்களுக்கு மரணம் எப்போது, எப்படி ஏற்படும் இருக்கும் என்பதை கூட சொல்கிறார்கள். அப்படி சொல்லப்படும் பலன்கள் மிகச் சரியாக, உண்மையாக இருப்பதாக பலரும் சொல்கிறார்கள். இது கணிப்புகள் மட்டுமல்ல சில பிரச்சனைகளுக்கு இங்குள்ள ஜோதிடர்களும், கோவில் புரோகிதர்களும் பரிகாரங்களும் சொல்கிறார்கள். தானம் அளிப்பது, மந்திரங்கள் சொல்லுவது, ராசி கற்கள் அணிந்து கொள்வது போன்ற பிரச்சனைகளை தீர்க்கும் பரிகாரங்களையும் சொல்கிறார்கள்.

வைத்தீஸ்வரன் கோவில் நாடி ஜோதிடம் பார்ப்பதற்கான ஊர் மட்டுமல்ல இங்குள்ள சிவன் கோவிலும் தனித்துவமானது தான். இந்த ஊர் சிவனுக்கு வைத்தீஸ்வரன், வைத்தியநாத சுவாமி என்ற பெயர்கள் உள்ளன. அவரது பெயராலேயே இந்த ஊர் வைத்தீஸ்வரன் கோவில் என அழைக்கப்படுகிறது. வைத்தீஸ்வரன் என்றால் குணமாக்கும் கடவுள் என்று பெயர். பல காலமாக தீராத உடல் நோய்கள் தீர ஏராளமான பக்தர்கள் இங்கு வந்து வேண்டிக் கொள்கிறார்கள். இது நவகிரக பரிகார தலங்களில் செவ்வாய் கிரகத்திற்குரிய தலமாக விளங்குகிறது.

# T20 WC 2026: மிட்செல் மார்ஷ் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி எப்படி?




அடுத்த மாதம் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற உள்ள டி20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் காயம் காரணமாக ஓய்வில் உள்ள கம்மின்ஸ், ஹேசில்வுட் மற்றும் டிம் டேவிட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தத் தொடர் வரும் பிப்ரவரி 7ம் தேதி முதல் மார்ச் 8ம் தேதி வரை நடைபெறுகிறது. ஒரு மாதம் நடைபெறும் இந்த டி20 கிரிக்கெட் திருவிழாவில் மொத்தம் 55 ஆட்டங்கள் நடைபெறுகின்றன. இதில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. இவை 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் 5 அணிகள் இடம் பெற்றுள்ளன.

இதில் ‘பி’ பிரிவில் தொடரை நடத்தும் இலங்கை, ஆஸ்திரேலியா, அயர்லாந்து, ஓமன், ஜிம்பாப்வே ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், இந்த தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட ஆஸ்திரேலிய அணியை அறிவித்துள்ளது கிரிக்கெட் ஆஸ்திரேலியா. பிப்ரவரி 11ம் தேதி இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா விளையாடுகிறது. அந்த அணியின் முதல் சுற்று ஆட்டங்கள் அனைத்தும் இலங்கையில் நடைபெறுகிறது.

ஆஸ்திரேலிய அணி விவரம்: மிட்செல் மார்ஷ் (கேப்டன்), சேவியர் பார்ட்லெட், கூப்பர் கனோலி, கம்மின்ஸ், டிம் டேவிட், கேமரூன் கிரீன், நேதன் எல்லிஸ், ஹேசில்வுட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், மேத்யூ குனேமன், கிளென் மேக்ஸ்வெல், மேத்யூ ஷார்ட், ஸ்டாய்னிஸ், ஆடம் ஸாம்பா.

ஆஸ்திரேலிய அணி எப்படி? இந்தத் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுவதை கருத்தில் கொண்டு சுழற்பந்து வீச்சாளர்களை அணியில் அதிகம் சேர்த்துள்ளது ஆஸ்திரேலிய அணி. ஸாம்பா, ஷார்ட், மேக்ஸ்வெல் உள்ளிட்ட அனுபவ சுழற்பந்து வீச்சாளர்களுடன் இடது கை சுழற்பந்து வீச்சாளர்களான மேத்யூ குனேமன், கனோலி ஆகியோரும் அணியில் உள்ளனர். இது அணித்தேர்வில் சர்ப்ரைஸ். எனினும், இது உத்தேச அணிதான் என ஆஸ்திரேலிய அணி தேர்வுக்குழு தலைவர் ஜார்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக ஓய்வில் உள்ள கம்மின்ஸ், ஹேசில்வுட் மற்றும் டிம் டேவிட் ஆகியோரும் தொடரின் போது உடற்தகுதி பெறுவார்கள் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மார்ஷ், ஹெட், இங்கிலிஸ், மேக்ஸ்வெல், ஸ்டாய்னிஸ் என அதிரடி பேட்ஸ்மேன்கள், எல்லிஸ், கம்மின்ஸ், ஹேசில்வுட் உள்ளிட்ட பவுலர்கள் அந்த அணியில் இடம்பெற்றுள்ளனர். இது அந்த அணிக்கு வலு சேர்க்கிறது. இதில் பெருபாலான வீரர்கள் ஐபிஎல் கிரிக்கெட் ஆடிய அனுபவம் கொண்டவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. மேக்ஸ்வெல், ஸ்டாய்னிஸ், கேமரூன் கிரீன், டிம் டேவிட் ஆகியோர் அனுபவ ஆல்ரவுண்டர்களாக அணியில் உள்ளனர்.

# இந்திய அணிக்கு அடுத்த 6 மாதங்கள் முக்கியமான காலம்: சொல்கிறார் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர்



இந்திய மகளிர் அணிக்கு அடுத்த 6 மாதங்கள் முக்கியமான காலமாக அமைந்துள்ளது என்று அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இலங்கை மகளிர் அணிகளுக்கு இடையிலான 5வது மற்றும் கடைசி டி20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இதில் முதலில் விளையாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 175 ரன்கள் எடுத்தது.

கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 43 பந்துகளில் 68 ரன்கள் விளாசினார். அமன்ஜோத் கவுர் 21, அருந்ததி ரெட்டி 27 ரன்கள் எடுத்தனர். பின்னர் விளையாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 160 ரன்கள் எடுத்து 15 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இதன் மூலம் இந்தத் தொடரை இந்திய அணி 50 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் ஹர்மன்பிரீத் கவுர் ஆட்டநாயகியாகவும், ஷபாலி வர்மா தொடர்நாயகியாகவும் தேர்வு செய்யப்பட்டனர். போட்டி முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் கேப்டன் ஹர்மன் பிரீத் கவுர் கூறியதாவது: இலங்கைக்கு எதிரான தொடரை முழுமையாக கைப்பற்றியதில் மகிழ்ச்சியாக உள்ளோம்.

2025ல் 50 ஓவர் உலகக் கோப்பையைக் கைப்பற்றினோம். அடுத்த ஆண்டில் டி20 உலகக் கோப்பை பிரிட்டனில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்காக நாங்கள் மிகச் சிறந்த முறையில் தயாராக உள்ளோம். எனவே, அடுத்த 6 மாத காலம் இந்திய மகளிர் அணிக்கு மிகவும் முக்கியமான காலமாக அமைந்துள்ளது.

இந்த 6 மாத காலத்தில் சிறந்த முறையில் பயிற்சி பெறுவோம். 2025ம் ஆண்டு இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு சிறந்ததாக அமைந்தது. அதைப் போலவே 2026ம் ஆண்டும் மிகச்சிறப்பாக அமையும் என எண்ணுகிறோம். அடுத்து வரவுள்ள 6 மாத காலத்தில் பல்வேறு போட்டிகளில் நாங்கள் பங்கேற்கவுள்ளோம்.

இது டி20 உலகக் கோப்பைப் போட்டிக்கான சிறந்த பயிற்சியாக அமையும். ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி விட்டு உடனடியாக சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டிக்கு எங்களை மாற்றிக் கொள்வது எளிதான விஷயம் கிடையாது. ஆனால், இலங்கைக்கு எதிரான தொடரில் அணியில் உள்ள ஒவ்வொரு வீராங்கனையும் உற்சாகத்துடன் விளையாடினர்.

அதுமட்டுமல்லாமல் விரைவில் மகளிர் பிரீமியர் லீக் (டபிள்யூபிஎல்) போட்டியும் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் விளையாடுவது மிகப்பெரிய அனுபவத்தைக் கொடுக்கும். அது டி20 உலகக் கோப்பைப் போட்டிக்கு உதவும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# ‘அனலி’யில் ஆக்‌ஷன் ஹீரோயின்: சிந்தியா லூர்டே தகவல்

சிந்தியா புரொடக்‌ஷன்ஸ் சார்பில் நடிகை சிந்தியா லூர்டே தயாரித்து, ஹீரோயினாக நடித்துள்ள திரைப்படம், ‘அனலி’.

அறிமுக இயக்குநர் தினேஷ் தீனா எழுதி இயக்கியுள்ள திரைப்படத்தில், சக்தி வாசுதேவன், குமரவேல், இனியா, கபிர் துகான் சிங், அபிஷேக் வினோத், ஜென்சன் திவாகர் உள்பட பலர் நடித்துள்ளனர்.

இதன் செய்தியாளர்கள் சந்திப்பில் சிந்தியா லூர்டே கூறும்போது, “‘வர்ணாஸ்ரமம்’, ‘தினசரி’ படங்களுக்குப் பிறகு 'அனலி' என்னுடைய மூன்றாவது தயாரிப்பு. இந்த படத்தில் நானே நாயகியாகவும் நடித்திருக்கிறேன். இதில் வழக்கமான ஹீரோயின் கதாபாத்திரம் இல்லை. கொஞ்சம் தனித்துவமானதாக இருக்கும்.

90களில் தமிழ் சினிமாவில் விஜயசாந்தி ஆக்‌ஷன் படங்களில் நடித்திருக்கிறார். இந்தப் படத்தில் முதன் முறையாக முழுநீள ஆக்‌ஷன் கதாநாயகியாக நடித்திருக்கிறேன். நாயகர்களே நடிக்கத் தயங்கும் காட்சிகளிலும் டூப் போடாமல் ரிஸ்க் எடுத்து நடித்திருக்கிறேன். ஆக்‌ஷன் காட்சிகளில் ரொம்பவே கஷ்டப்பட்டு நடித்திருக்கிறேன்.

இதில் ஹீரோ என்று யாரும் கிடையாது. நிறைய வில்லன்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு படத்திலும் நிறைய கற்றுக் கொள்கிறேன். இந்தப் படத்திலும் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என கற்றுக்கொண்டேன்” என்றார். இந்தப் படம் ஜன.2ம் தேதி வெளியாகிறது. ரெட் ஜெயன்ட் மூவீஸ் வெளியிடுகிறது.

# தமிழ் சினிமா 2025ல் ஏமாற்றங்களும் ஆச்சர்யங்களும்! ஒரு விரைவுப் பார்வை



தமிழ் திரையுலகைப் பொறுத்தவரை 2025ம் ஆண்டில் பெரும் எதிர்பார்ப்புடன் வெளியான பெரிய பட்ஜெட் படங்கள் ஏமாற்றத்தையும், எந்தவித எதிர்பார்ப்பும் இன்று வெளியான பல சிறிய பட்ஜெட் படங்கள் ஆச்சர்யத்தையும் தந்தன. பல தசாப்தங்களுக்குப் பிறகு இணைந்த ஆளுமைகளின் கூட்டணி கூட ரசிகர்களை ஏமாற்றிய நிலையில், எந்தவித ஆரவாரமும் இன்றி வந்த எளிய கதைகள் வசூலில் சாதனை படைத்துள்ளன.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு ஏமாற்றிய 'பெரிய பட்ஜெட்' படங்கள்:

தக் லைஃப்: 'நாயகன்' படத்துக்குப் பிறகு சுமார் 38 ஆண்டுகள் கழித்து மணிரத்னம் கமல்ஹாசன் கூட்டணி இணைந்ததால் இப்படம் உலகளவில் எதிர்பார்க்கப்பட்டது. கூடவே சிம்பு, த்ரிஷா, அசோக் செல்வன் என பெரும் நட்சத்திரப் பட்டாளம். ஆனால், படத்தின் கதைக்களம் பொதுவான ரசிகர்களைச் சென்றடையத் தவறியதால், இப்படம் பெரும் ஏமாற்றமாக அமைந்தது. பாடல்கள் மட்டுமே சொல்லிக் கொள்ளும்படி அமைந்த இப்படத்தில் நடிப்பு, திரைக்கதை, பின்னணி இசை, வசனங்கள் என அனைத்தும் சமூக வலைதளங்களில் ட்ரோல் செய்யப்பட்டன.

விடாமுயற்சி: மகிழ்திருமேனி அஜித் குமார் கூட்டணியில் உருவான இப்படம், பலமுறை தள்ளிப்போய் வெளியானதால் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. ஆக்‌ஷன், அனிருத்தின் பின்னணி இசை, ஒளிப்பதிவு என தொழில்நுட்ப ரீதியாகப் பாராட்டப்பட்டாலும், சுவாரசியமற்ற திரைக்கதையால் வசூல் ரீதியாகப் பெரும் சரிவைச் சந்தித்தது இப்படம்.

ரெட்ரோ: ‘ஜிகிர்தண்டா 2’ வெற்றிக்குப் பிறகு கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படம் என்ற லேபிளுடன் பெரும் எதிர்பார்ப்புடன் வெளியான படம். ட்ரெய்லர், பாடல்களும் இப்படத்துக்கு பெரும் ஹைப்பை ஏற்றி இருந்தன. ஒரு மாறுபட்ட அனுபவமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கதையில் இருந்த குழப்பங்கள் ரசிகர்களைக் கவரவில்லை.

மதராஸி: ஏ.ஆர்.முருகதாஸ் சிவகார்த்திகேயன் கூட்டணியில் உருவான இப்படம், ஒரு கமர்ஷியல் ஹிட் கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பலவீனமான எழுத்து காரணமாக இப்படம் வரவேற்பை பெறவில்லை.

எதிர்பார்ப்பின்றி வெளியாகி பெரும் வெற்றி பெற்ற 'சர்ப்ரைஸ் ஹிட்ஸ்'

டூரிஸ்ட் ஃபேமிலி: 2025ன் மிகப் பெரிய ஆச்சரியம் சசிகுமார் நடிப்பில் வெளியான இந்தத் திரைப்படம். ஈழத் தமிழர் குடும்பத்தைச் சுற்றி நடக்கும் நகைச்சுவை கலந்த இந்த உணர்வுபூர்வ படம், பெரும் வரவேற்பை பெற்றது. ரூ.10 கோடி பட்ஜெட்டில் எடுக்கப்பட்டு சுமார் ரூ.90 கோடிக்கு மேல் வசூலித்து மிகப் பெரிய வெற்றி பெற்றது.

குடும்பஸ்தன்: மணிகண்டன் நடிப்பில் வெளியான இப்படம், நடுத்தர வர்க்கக் குடும்பங்களின் வலிகளை நகைச்சுவையுடன் பேசியது. பெரிய நடிகர்கள் யாருமின்றி மிக எளிய கதைக்களத்துடன் மிகப் பெரிய வெற்றியை இப்படம் சாத்தியமாக்கியது.

டிராகன் - ட்யூட்: ‘லவ் டுடே’ படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் வெளியான இந்த இரண்டு படங்களும் இளைஞர்களை வெகுவாகக் கவர்ந்தது. சிறிய பட்ஜெட்டில் உருவான இப்படங்கள் தலா ரூ.100 கோடிக்கும் மேல் வசூலித்து சாதனை படைத்தன.

பைசன்: மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடித்த இப்படம், அதன் ஆழமான அரசியல் மற்றும் விளையாட்டு பின்னணிக்காகப் பெரும் பாராட்டுகளைப் பெற்றது. துருவ் விக்ரமுக்கு மிகச்சிறந்த பாராட்டுக்களை பெற்றுத் தந்தது.

இந்த ஆண்டில் ரஜினிகாந்தின் 'கூலி', அஜித்தின் ‘குட் பேட் அக்லி’ படங்கள் அதிக வசூலை ஈட்டினாலும், கலவையான விமர்சனங்களை எதிர்கொண்டன. ஒட்டுமொத்தமாக, 2025ம் ஆண்டு ‘ஸ்டார் பவர்’ மட்டுமே ஒரு படத்தைக் காப்பாற்றாது, பலமான திரைக்கதை இருந்தால் மட்டுமே மக்கள் திரையரங்கிற்கு வருவார்கள் என்பதைத் மீண்டும் ஒருமுறை நினைவூட்டியது.




# காரைக்குடியில் 2026 ஆம் புத்தாண்டை முன்னிட்டு,ரிவைவல் சர்ச்ஆஃப் காட் தேவாலயத்தில் புத்தாண்டு சிறப்பு ஆராதனை நடைபெற்றது.

சிவகங்கை, ஜன.2-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 2026 ஆம் புத்தாண்டை முன்னிட்டு, காரைக்குடி கழனிவாசல் வ.உ.சி ரோடு பகுதியில் அமைந்துள்ள ரிவைவல் சர்ச் ஆஃப் காட் தேவாலயத்தில் மிக எளிமையான முறையில் புத்தாண்டு சிறப்பு ஆராதனை நடைபெற்றது.புதிய ஆண்டின் முதல் தருணத்தை ஆண்டவர் சமுகத்தில் துவங்கும் நோக்கில், இரவு 10 மணியளவில் ஆராதனை ஆரம்பமானது. தேவாலய மூப்பர்களின் வழிநடத்தலில் நடைபெற்ற நிகழ்வில் பாடல்கள், ஸ்தோத்திரத் துதிகள் மற்றும் ஜெபங்கள் இடம்பெற்றன. சரியாக நள்ளிரவு 12 மணிக்கு, அனைவரும் ஒன்றிணைந்து 2026 ஆம் ஆண்டை உற்சாகமாக வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து, தேவாலயத்தின் தலைமை போதகர் பாஸ்டர் எம். கிங்ஸ்லி அவர்கள் விசுவாசிகளுக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார்.மேலும், ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டு, ஆண்டவரின் வழிகாட்டுதலுடன் புதிய ஆண்டை எதிர்கொள்ள அனைவரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.




# சிவகங்கையில் சாலை பாதுகாப்பு மாத விழா:வட்டார போக்குவரத்து அலுவலர் பிட் நோட்டீஸ்கள் வழங்கிவிழிப்புணர்வு

சிவகங்கை ஜன.2-

தமிழக போக்குவரத்து துறை சார்பில் ஜனவரி மாதம் போக்குவரத்து விழிப்புணர்வு மாதமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சிவகங்கை மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு மாத விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக, சிவகங்கை பேருந்து நிலையத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் கருப்பணன் தலைமையிலான குழுவினர் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதில், நான்கு சக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் சீட் பெல்ட் அணிய வேண்டும், இரு சக்கர வாகன ஓட்டிகள் ஹெல்மெட் அணிந்து வாகனம் இயக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கிய பிட் நோட்டீஸ்கள் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களிடம் வழங்கப்பட்டன.மேலும், பேருந்துகளின் உள்ளே சென்று பயணிகளிடம் சாலை பாதுகாப்பு விதிமுறைகள் குறித்து விளக்கி கூறிய அதிகாரிகள், விபத்துகளைத் தவிர்க்க பாதுகாப்பு விதிகளை கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தினர். இந்த விழிப்புணர்வு நடவடிக்கையால் பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



■ மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் நிறுவன தலைவர் ராஜேஷ் சார் ஆலோசனைப்படி அமைப்பில் பயணிக்கும் ரகுபதி ஆனு இவர்களின் குழந்தை யக்ஷித் பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுக்கா மாங்கா வனத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டன இதில் பள்ளியின் துணை ஆசிரியர் லீமா நிறுவன பொதுச்செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்த்ராஜ் மாநில ஆலோசகர் ராமன் மாநில பொருளாள பானுமதி மாநில மகளிர் அணி துணைஆலோசகர் ஈஸ்வரி மாநில இளைஞரணி துணைத் தலைவர் ஜான் மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராணி திருச்சி மாவட்டம் இளைஞர் அணி ஒருங்கிணைப்பாளர் சஞ் சய் மற்றும் குழந்தைகள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# நாசிக்சோலாபூர்அக்கல்கோட் இடையே ரூ.19,142 கோடி மதிப்பில் 6 வழித்தட திட்டம்

புதுடெல்லி, ஜன.2-

மகாராஷ்டிராவில் ரூ.19,142 கோடி செலவில் அமைக்கப்பட உள்ள நாசிக்சோலப்பூர்அக்கல் கோட் 6 வழித்தட கட்டுமான திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நாசிக்சோலப்பூர்அக்கல்கோட் இடையில் 374 கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்பட உள்ள இந்த பசுமைவழி அணுகல் திட்டம் பிஓடி (சுங்கச்சாவடி) முறையில் கட்டப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்தத் 6 வழித்தட திட்டம் நாசிக், அகில்யநகர், சோலாப்பூர் போன்ற முக்கிய பிராந்திய நகரங்களை கர்னூலுடன் இணைத்து போக்குவரத்து வசதியை வழங்கும்.

ஒருங்கிணைந்த போக்குவரத்து உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். முன்மொழியப்பட்ட இந்த 6 வழித்தட திட்டம் மேற்கு கடற்கரையிலிருந்து கிழக்கு கடற்கரை வரை நேரடி இணைப்பை வழங்கும். இது பயண நேரத்தை 17 மணிநேரம் குறைக்கும், பயண தூரத்தை 201 கி.மீ குறைக்கும்.

சென்னை துறைமுக முனையத்திலிருந்து, திருவள்ளூர், ரேணிகுண்டா, கடப்பா மற்றும் கர்னூல் வழியாக ஹசாப்பூர் (மகாராஷ்டிரா எல்லை) வரை 4வழிச் சாலைகள் (700 கி.மீ நீளம்) ஏற்கெனவே கட்டுமானத்தில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.-

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம் பெரும்பாலை, சிறுபாலையில் திமுக சார்பில் நடைபெற்றது

இளையான்குடி ஜன 02-

இளையான்குடி வடக்கு ஒன்றிய திமுக சார்பில் "என் வாக்குச்சாவடி ஶ்ரீ வெற்றி வாக்குச்சாவடி" என்ற தலைப்பில் பரப்புரைக் கூட்டம் பெரும்பாலை மற்றும் சிறுபாலை பகுதிகளில் நடைபெற்றது.




இந்த கூட்டத்திற்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன் ஆகியோர் தலைமையிலானது. மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சந்திரசேகர், பாலமுருகன், பாஸ்கரன், சாரங்கபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார், மானாமதுரை தொகுதி பார்வையாளர், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ரி.ஸி.ழி. போஸ் ஆகியோர் சிறப்புரையாற்றி, திமுக அரசின் சாதனைகள் மற்றும் வருங்கால திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

மேலும், ஒன்றிய செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப. மதியரசன் நிரு.சிஷீனீ, இளையான்குடி பேரூராட்சி தலைவர் மற்றும் பேரூர் செயலாளர் பி.ஏ. நஜூமுதீன், பேரூராட்சி துணை தலைவர் டி.கே. இப்ராஹீம், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் புலிக்குட்டி, மாவட்ட பிரதிநிதி சாரதி (எ) சாருஹாசன், மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கி. கண்ணன் விசிகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதேபோல், ஒன்றிய துணை செயலாளர்கள் தமிழ் செல்வி, பாலசுப்பிரமணியன், கருணாகரன், ராஜேந்திரன், ஒன்றிய பொருளாளர் முருகேசன், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் நீலமேகம், சுந்தரம், ராஜாங்கம், பாண்டி, இருளப்பன், இராமு, செல்லச் சாமி, உடையார் உள்ளிட்ட நிர்வாகிகளும், மாவட்ட பிரதிநிதி உதய சூரியன், இளைஞரணி பிரபு, து. மலைச்சாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த பரப்புரைக் கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு திமுகவுக்கு ஆதரவு தெரிவித்தனர்..




# சென்னை தெற்கு மாவட்ட சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்

மேடவாக்கம் ஜன02-

சென்னை தெற்கு மாவட்ட புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியம் ,மேடவாக்கம் ஊராட்சியில் இளைஞர் அணி துணை அமைப்பாளர், ஆர். எஸ்.லோகேஸ்வரா ஏற்பாட்டில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் முன்னிலையில் (31.12.2025) அன்று மாலை 6 மணிக்கு மறைந்த தலைமை பொதுக்குழு உறுப்பினர், ஒன்றிய செயலாளர், மேடவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான, ப.ரவி வீட்டின் அருகில் சென்னை தெற்கு மாவட்ட சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும்442,463, பாகங்களில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி விளக்க கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் சோழிங்கநல்லூர், எம்.எல்.ஏ. எஸ்.அரவிந்த ரமேஷ் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன் ஒன்றிய கழகத் துணைச் செயலாளர்,எச்.டி.போஸ், கு. வேணுகோபால், ராமையா நகர் கிளைக் கழக செயலாளர், எஸ்.சுரேஷ் மற்றும் ஏ.வி.எம், முருகன்,மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ரவி கேசவன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர், ஜி. லோகேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் எஸ். கிஷோர் மேடவாக்கம் இளைஞர் அணி அமைப்பாளர் கே. ராஜேஷ் துணை அமைப்பாளர், எம். பி .என். பாஸ்கர், எம் .பி. என். ரமேஷ், தாவூத் நகர் இளைஞர் அணி அமைப்பாளர், எம் .ஆர். ரமேஷ், ஆர். சுந்தர், சி .ஆர் எம். முருகன் மூர்த்தி, கே. ரமேஷ், ஆகாஷ், ஏழுமலை, கோபால், கே.சரத்குமார், மணிகண்டன் டி. அன்பழகன், எம். உமாபதி, எஸ். சுப்ரமணி, மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# மேல்மங்கலம் ஊராட்சியில் ஊரக மற்றும் வேளாண் விழிப்புணர்வு நிகழ்ச்சி.

பெரியகுளம். ஜனவரி. 02-

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாரத்திற்குட்பட்ட மேல்மங்கலம் ஊராட்சியில், ஊராட்சி செயலாளர் ஆர். முருகன் முன்னிலையில், உசிலம்பட்டி கிருஷ்ணா வேளாண் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் இளங்கலை மாணவர்கள் மு. கார்த்திகேயன், சேவுகமூர்த்தி, அருண்மொழி, மாதவகிருஷ்ணன், திலக், பிரவீன் மற்றும் அன்புமணி ஆகியோர் இணைந்து, Participatory Rural Appraisal (PRA) முறையின் கீழ், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்காக ஊரக அமைப்பு மற்றும் வேளாண்மை சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியின் போது, வழக்கமான வரைபடம், வென் வரைபடம், ஊரக வளங்கள் வரைபடம், இயக்கம் வரைபடம் உள்ளிட்ட பல்வேறு PRA கருவிகள் பயன்படுத்தப்பட்டு, விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி தொடர்பான தகவல்கள் பொதுமக்களிடையே தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று பயனடைந்தனர்.

# அருகே ஆட்டுக்கொட்டகையில் மின்சாரம் பாய்ந்து பெண் பலி!

சிவகங்கை, ஜன.2-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் அருகே உள்ள ஆலங்குடி பகுதியைச் சேர்ந்தவர் காவேரி மனைவி சாந்தி (வயது 55). இவர், கடம்பங்குடியில் தனது மகள் ராஜேஸ்வரி வீட்டில் தங்கியிருந்தார்.



இந்நிலையில், நேற்று ஆடுகள் கட்டியிருக்கும் கொட்டகைக்கு சென்ற சாந்தி, அங்குள்ள தகரத்தை பிடித்தபோது, வீட்டிற்கு சென்ற மின்சாரம் எதிர்பாராத விதமாக தகரத்தில் பாய்ந்துள்ளது. இதில் மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்ட சாந்தி, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து காளையார் கோவில் காவல்துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற காளையார் கோவில் காவல்துறையினர் உயிரிழந்த சாந்தியின் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர் இச்சம்பவம் தொடர்பாக காளையார் கோவில் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



■ சிவகங்கை மாவட்டம் நாளை ஜனவரி 3 மின்தடை சிங்கம்புணரி மற்றும் ஆ.காளாப்பூர் ஆகிய துணை மின் நிலையங்கள் மற்றும் திருப்பாச்சேத்தி, பொட்டபாளையம் நெல் முடிக்கரை ஆகிய துணை மின் நிலையங்கள் மற்றும் அருகில் உள்ள ஊர்களில் நாளை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின்தடை இருக்கும் என மின் செயற் பொறியாளர்கள் அறிவித்துள்ளனர்.

# வங்கதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் உடல் கணவரின் கல்லறை அருகில் நல்லடக்கம்

டாக்கா, ஜன.2-

மறைந்த வங்கதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் உடல் நேற்று அவரது கணவர் ஜியாவுர் ரஹ்மானின் கல்லறைக்கு அருகில் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வங்கதேசத்தின் பிரதமராக 2 முறை பதவி வகித்தவரும் வங்கதேச தேசிய கட்சியின் (பிஎன்பி) தலைவருமான கலீதா ஜியா, உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் காலமானார். கலீதா ஜியாவின் உடல், அவரது மகன் தாரிக் ரஹ்மானின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவரது உடலுக்கு ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர். நேற்று காலை 11 மணியளவில் அவரது உடல் வாகனம் மூலம் டாக்காவில் உள்ள சன்சத் பவனுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் வங்கதேச இடைக்கால அரசின் ஆலோசகர் முகமது யூனுஸ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதையடுத்து அவரது உடல் ஊர்வலமாக டாக்காவின் சவுத் பிளாசா பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு கலீதா ஜியாவின் உடல் அவரது கணவர் ஜியாவுர் ரஹ்மானின் கல்லறைக்கு அருகில் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கில் பிஎன்பி தொண்டர்கள் உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

மேலும் தெற்காசிய நாடுகள் சார்பில் பாகிஸ்தான் தேசிய அவையின் சபாநாயகர் சர்தார் அயாஸ் சாதிக், நேபாள வெளியுறவு அமைச்சர் பால நந்தா ஷர்மா, பூடான் வெளியுறவு அமைச்சர் லியோன்போ துங்யெல், இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜிதா ஹெராத், மாலத்தீவு உயர்க்கல்வி அமைச்சர் அலி ஹைதர் அகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இறுதிச் சடங்கில் இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கலந்து கொண்டார். முன்னதாக, கலீதா ஜியாவின் மூத்த மகனும் பிஎன்பியின் செயல் தலைவருமான தாரிக் ரஹ்மானை ஜெய்சங்கர் சந்தித்தார். பிரதமர் நரேந்திர மோடியின் இரங்கல் கடிதத்தை அவரிடம் ஒப்படைத்து, இந்தியாவின் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார். துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு தனது அனுதாபங்களை தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161